தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை).

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு—திருக்குறள்

தொகுதி IV. } ரௌத்ரி௵ புரட்டாசி௴ } பகுதி 6

அறிவுநூல் மொழிகள்.

Scientific Terms.

நமது பத்திரிகையில் அறிவுநூல் விஷயங்களைப் பற்றி எழுதிவரும் நண்பர் அனைவரும், ஆங்கிலத்தினின்றே அவ் வறிவைப் பெற்று, ஆங்கிலம் கற்காத நமது நாட்டினர்க்கு அவ் வறிவினையும் அவ் வறிவின் பயனையும் கொடுக்கவேண்டுமென்ற எண்ணங் கொண்டவர். அந் நூல்களிலுள்ள பல மொழிகளுக்குப் பிரதிபதங்கள் நாம் நாடோடியாய்ப் பேசும் பேச்சிலாவது, நம்முள் வழங்கிவரும் அகராதிகளிலாவது காணப்படாமையால் அவர் அடிக்கடிப் பிரதிபதங்களைத் தேவதிலேயே தமது மனது முழுவதையும் செலுத்தவேண்டியதாகிறது. அவர் அநேகமாகப் புதியமொழிகளையே உண்டாக்க வேண்டியிருக்கிறது. சிற்சில வேளைகளில் இவை நன்கு வாய்க்கின்றன. பெரும்பாலும் இவ்வாறு உண்டாக்கப்படும் மொழிகள் அதிருத்தியையே தருகின்றன. வேறு வழி இல்லாததால் தற்போதைக்கு தமது எண்ணத்தை இம் மொழிகள் வெளி

யிடுமாயின் அது போதும், பிற்பாடு பார்த்துக்கொள்வோம் என்றே அவர் முயன்று வருகின்றனர். இவ்விஷயம் அவரது ஊக்கத்தைச் சிறிது மட்டுப்படுத்துகின்றதென்பது சொல்ல வேண்டியதில்லை. அவருக்கு வேண்டிய உதவியைப் புரிந்து, அவர் தாமாக ஏற்றுக்கொண்ட நற்காரியத்தை இனிது செய்யுமாறு முயலுவது நமது கடமையாகும்.

நாம் தேடவேண்டிய பிரதிபதங்களைத் தனித் தமிழ் வேர்களினின்றே அமைத்துக் கொள்ளவேண்டுமென்று சிலர் வற்புறுத்துகின்றனர். தமிழுக்குச் சகோதர பாஷையா யிருந்துவரும் வடமொழியினின்று அப் பிரதிபதங்களைத் தேடிக் கொள்ளலாமென்று சிலர் துணிகின்றனர். வேறு சிலர் வீண் முயற்சி ஏன்; உலகமெங்கும் பரவிவரும் ஆங்கில மொழிகளை அப்படியே ஏற்றுக்கொண்டாலென்ன வென்று கேட்கின்றனர். இதைப்பற்றி நாம் ஒருவிதமான தீர்மானத் தைக் கொள்ள வேண்டும். அப்படி யானாற்றான் பிரதிபதங் களை அமைப்பது சற்று எளிதாகும்.

நமது சந்தாதாரரில் சிலர் தமிழ்ப் புலவராயிருக்கின் றனர். வேறு சிலர்க்குத் தமிழ்ப்புலவர் நண்பரா யிருக்கக் கூடும். இவர் நமக்குத் துணைநின்றால் இக் காரியம் நன்கு நடைபெறுமென்பதற்கு ஐயமில்லை. இவர் ஆங்கில அறிவுநூற் புத்தகங்களின் அனுபந்தங்களிலுள்ள மொழிகளை வரிசை யாக மொழிபெயர்த்து உதவினால் வெகு சீக்கிரத்திலேயே நமது எண்ணம் நிறைவேறும்.

ஆதலால் தமிழின் முன்னேற்றத்தை நாடும் நண்பர் அனைவரும் இதில் சிறிது ஊக்கம் கொண்டு அறிவு நூற் பதங்களுக்கு ஏற்ற மொழிகளை எமக்கு அனுப்புவிப்பாராயின் நாம் அவற்றை வந்தனத்துடன் ஏற்று, அவ்வப்போது நமது நேசனில் வெளியிட்டுச் சரியான தமிழ் மொழிகளை நிலை நிறுத்த எம்மால் கூடியவரை முயலுவோம்.

P. N. அப்புஸ்வாமி,
கௌரவத் துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச்சங்கம், மயிலாப்பூர்.

பல இயற்றல்.

Multiple Production

ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர் B.A., B.L., எழுதியது

கைத் தொழில் துறைகள் பலவற்றுளும் பெரிதும் பணம் திரட்டும் முறைகளை நன்கு ஆய்ந்து அறிந்து பின்பற்றியவர்கள் அமெரிக்கர்களும், ஜெர்மானியர்களுமே. ஒரு நாட்டிற்கு உயர்வு அளிக்கும் அரும் பெரும் அறிவு நூல் ஆராய்ச்சிகள் ஒரு புறமிருப்ப, அவ் ஆராய்ச்சிகளை எவ்வாறு பணம் திரட்டப் பயன்படுத்தக் கூடும் என்று அறிந்துகொள்ளுவதிலேயே இவர்கள் குறியாயிருக்கிறார்கள்.

சமீபத்தில் முடிவுபெற்ற இப் பெரும் சண்டைக்கு முன்னமேயே இவர்கள் அநேகம் நுட்பங்களைக் கையாண்டு வந்தார்கள். அவற்றுள் முதன்மையானது பெருக இயற்றல் என்பது. அதாவது, குறிப்பாகப் பலரும் நாடத்தகும் பெருள் ஒன்றை, நூற்றுக் கணக்காக இயற்றாது லக்ஷக்கணக்காக இயற்றுவதே. இவ்வாறு செய்வதற்கு முன் பணம் மிகுதியாக வேண்டும். ஆயினும் இதனால் உண்டாகும் சௌகரியங்கள் பல. நேரத்தையும், செலவையும் சுருக்கும் பல இயந்திரங்களின் உதவியைப் பெறுவது ஒன்று; தொழிலை மேல் பார்க்க அவ் அத்தொழிலில் மிகுந்த தேர்ச்சி யுடையாரை ஏவுவது மற்றொன்று; பல துளி வெள்ளமாம் ஆதலால் இயற்றிய பொருள் ஒவ்வொன்றிலும் சிறிது ஊதியத்தையே கூட்டிவைத்து விலையைக் குறைவாகவே கிட்டப் படுத்துவது மற்றும் ஒன்று. இம் மூன்று வழிகளாலும் இவர்கள் தம்மோடு

வியாபாரத்தில் போட்டிபோடுவோரைத் தலையெடுக்க ஒட்டாது அமுக்கிவிடுகின்றனர். மேலும் ஒவ்வொரு கைத்தொழிலிலும் மிகுதியாக வாங்கப்படும் பொருளைக் குறைந்த விலைக்கு விற்பதால் மற்றப் பொருள்களையும் தம்மிடமே வாங்கும்படி தூண்டும் அல்லவா? இதனால்தான் ஜெர்மானிய சிம்மினிகளும், அமெரிக்கா மோடார்கார்களும் ஆங்கில நாட்டிலிருந்து விலைக்கு வரும் அப் பொருள்களைவிட விலை குறைந்திருப்பன.

சண்டை காரணமாக ஜெர்மனி அடைபட்டுப் போகவே வெளிநாடுகளிலிருந்து ஏராளமாய் வந்துகொண்டிருந்த பல பொருள்களை அது அடைய முடியாமற் போயிற்று. இதனால் எவ்வழியாலும் அவற்றுள் இன்றியமையாதனவற்றை இயற்றுதற்கும், கையிலிருக்கும் பொருள்களை மிகவும் செட்டாகச் செலவிடுதற்கும், ஒவ்வொரு பொருளினின்றும் அது ஈயக்கூடியது எல்லாவற்றையும் பெறுதற்கும் வேண்டிய சூழ்ச்சிகள் பலவும் அங்கு தேடற்குரிய ஆயின. அதன் தனி நிலையும், தன் நலத்தைத் தானே நாடவேண்டிய முழுப் பொறுப்பும் அதைத் தூண்டியதால், பயன்படாது வீண்போகும் பொருள்களை யெல்லாம் அது பயன்படுத்த முயன்றது. ஆனதுபற்றி இப்பொழுது ஜெர்மானியக் கைத்தொழில் சாலைகளில் ஏற்படும் பொருள் அழிவு மிகக் குறை. செப்பனிடப்படாத இயற்கைப் பொருள்கள் தொழிற்சாலை அடையும் காலம் முதற்கொண்டே அவ் அச் செயற்கைப் பொருளுக்கு உதவாது மீந்துபோகும் ஒவ்வொரு கழிவையும் (Waste product) நன்கு பயன் படுத்துவது எங்ஙனம் என்று ஒவ்வொருபடியிலும் ஆராய்ந்து நடத்தி வருவதால் அங்கு உண்டாகும் பொருள் கழிவும் பொருள் அழிவும் மிகக் குறைவுபட்டு நமக்கு வியப்பைத் தருகின்றன. இதனால் முதற் குறியாகும் குறிபொருளை (Chief Product) குறை

ந்த விலக்குவிற்க முடிவதும் தவிர, படிப்படியாக உண்டாக்கப்படும் வழிபொருளை (Bye Product) விற்பதாலும் ஏராளமான லாபம் கிடைக்கிறது.

அமெரிக்காவில் பெருக்கி இயற்றும் முறை கையாளப்பட்டு வரினும், இப் புதிய பல இயற்றும் முறையை இன்னும் பின்பற்றவில்லை. ஆதலால் இயற்கைப் பொருளின் சிதைவு மிகுதியாய் இருக்கிறது. உதாரணமாக: மரங்களைக் காட்டினின்றும் வெட்டி, பற்பல செயற்கைப் பொருள்களாகச் செய்து முடிக்கும்வரை மிகுந்த அழிவு ஏற்படுகிறது. வெட்டப்படும் 1000 அடி மரத்தில் 320 அடியே மரக்கடையில் வந்து சேருகின்றது. இப்பொழுது வீணேபோகும் மரத்திலிருந்து காகிதம், கற்பூரத்தைலம், (Turpentine) ரோசனம், (Rosin) கள்பொருள் (Alcohol) முதலிய செய்யக்கூடும். இதை முன்னிட்டு மரக்கழிவு மாற்றுச் சங்கம் ஒன்று புறப்பட்டிருக்கிறது. இவ்வாறே கல்லெண்ணெய் அல்லது பெட்ரோலியம் (Petroleum) எடுக்கும் தொழிலிலும் உண்டாகும் வீண் அழிவை எளிதில் குறைத்துப் பல பயன்தரும் பொருள்களைப் புதிதாக உண்டாக்கக் கூடும். இவ் எண்ணெய்யை வெட்டி எடுக்கும் இடத்தில் கிளம்பும் எரிக்கத் தகுதியான காற்றில் பெரும்பான்மையும் வீண் போகிறது. இதோடு கலந்துகாணும் பிற எண்ணெய்களில் சிறிதும் வீணாகிறது.

தொழிற் சாலைகளில் எங்குமே செட்டான முறைகளை கையாளுவது தான் பயன்தருமாகையால், பெருக்கி இயற்றியும் பல இயற்றியும் பொருள் அழிவைக் குறைப்பது நாட்டின் நன்மையை நாடும் அறிவாளரது கடமை.

Chief Product குறி பொருள்
Bye Product வழி பொருள்
Waste Product கழி பொருள்

பிறந்த நாள் வாழ்த்து

Birth-day Sonnet.

[ஒரு கவி தன் மனைவியின் நாற்பத்தைந்தாம் பிறந்த நாளன்று பாடியது. இஃது, ஆங்கிலத்தில் "ஸானெட்" என்று வழங்கும் பதினாலடிப் பாமுறையில் வருவது]

நன்மரபில் வந்த நலமிக்க நல்லகுண நங்கை,
மன்மதனை எற்கு விலையாக்கி நல்குமண மங்கை,
தன்மனையை யாதும் வழுவாது தனையோம்பி ஆள்வாள்,
இன்மை, கவல் ஆதி தழுவாமல் எனையோம்பி ஆள்வாள்,
கன்மநெறி நின்று கரையேற்றுகைவல்ய நீதம்,
சன்முனர் நல்ல வினைகூட்டு தவநற்ப்ர சாதம்,
புன்மை, மன வன்மை அறியாத புகழ்சான்ற வல்லி,
என்மனைவி, என்கண், என்மக்கள் தமையீன்ற தல்லி,
இத்தகைய செல்வி, எமதான குடிவாழ, என்பால்,
பத்தொடெழு மூன்று பகராண்டு பாலிக்கும் அன்பால்,
மாசு, குறை நீங்கி, மகிழ்வீங்கி, மனமோங்கி, இந்நாள்,
ஈசனடி வீழ்ந்திவ் இயல்நாம * * * மின்னாள்,
காசினியில் நாற்ப தொடுநான்கு கவினாண்டு பின்னும்,
வாசமலர் சூடி [1] வளர்கென்ன வந்திப்பல் மன்னே.

அநாமகவி

---

1 அஃதாவது ஸுமங்கலியாக; எனவே, கவி, தன் ஆயுள் விருத்தியின் பொருட்டே கடவுளை வழிபடுவதாகி, உலகத்திலே மக்கள் செயல்கள் யாவும், ஊன்றி நோக்கின், தந்நயம் கருதியன என்னும் கொள்கையை விளக்கலாயிற்று.

ஆப்ரஹாம் லிங்கன்.

Abraham Lincoln.

ஸ்ரீமான் T. R. ராஜகோபால ஐயர் எழுதியது

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்"
"பொறுத்தார் பூமியாள்வார்".
"தன்னம்பிக்கை யுடையார் வெற்றியடைவார்".

இப் பொய்யா மொழிகளை நிரூபித்த உத்தம புருடரொருவரின் ஜீவ சரிதத்தை அடியில் வருமாறு எழுதுவோம்.

கேன்டகி (Kentucky) என்ற பட்டணத்திற் கருகிலுள்ள ஹார்டின் மாகாணத்தில் (Hardin County), 1809ம் வருடம் பிப்பிரவரி மாதம் 12-ந் தேதியில், டாமஸ் லிங்கனுக்கும் நான்ஸி ஹாங்க்ஸ் என்றவளுக்கும் பிறந்தவர் ஐக்கிய மாகாணங்களின் பதினாறும் பிரஜாதிபதியான ஆப்ரஹாம் லிங்கன் என்பவர்.

லிங்கன் குடும்பத்தினர், 1638-ம் ஆண்டில்; இங்கிலாந்திலிருந்து ஐக்கிய மாகாணங்களின் ஒரு பாகத்தில் குடியேறி, வறுமையினால் நாடுகள்தோறும் அலைந்து கடைசியில், மேற்கூறிய இடத்தில் தங்கினார்கள். இவ் விடத்தில், பாறைகளும் மலைகளும் அடர்ந்த காடுகளும் நிரம்பி இருந்தமையால், அவைகளைச் செப்பனிட்டு வயல்களாகத் திருத்தி உழுது பயிரிட்டு, பாறைகளாலும் மரங்களாலும் சிறு குடிசைகள் கட்டி வசித்து வந்தார்கள். முக்காலிகளும், மரக்கட்டில்களும், மெத்தைக்குப் பதிலாக இலைகளும், இவை மிக்க அவசியமான

சாமான்களுமே தவிர ஏனையவை ஒன்றுமில்லை. மிடியே அவர்களுடைய அத்தியந்த நண்பனாகவும், ஊக்கமும் உழைப்புமே அவர்களுடைய பொழுதுபோக்காகவும் விளங்கின.

இத்தகைய எளிய குடும்பத்தில் அவதரித்தவர் நமது லிங்கன். குடிசைகள் எழுப்புவதிலும், கழனிகளை உழுது பயிரிடுவதிலும், ஆகாரத்திற்காகக் கிடைக்கக்கூடிய பக்ஷிகளையும் வேட்டையாடிக் கொண்டுவருவதிலுமே இவருடைய இளமைப் பருவம் கழிக்கப்பட்டது. எனினும், மாந்தர்க்கு நன்மை பயக்கக் கூடியவைகளைச் செம்மையாக அறியவேண்டுமென்ற விருப்பம் இவரிடங் குடிகொண்டு நாட்குநாள் அதிகரித்தது. இவ்விடத்தில், யாதொரு பள்ளிக்கூடமு மில்லாததினாலும், இவருடைய பெற்றோர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாததினாலும், லிங்கனும் இவருடைய சகோதரியும் தம் நாட்டினின்று எட்டு மைலுக் கப்பாலுள்ள பாடசாலைக்குச் சென்று கல்விகற்றுவந்தார்கள். இவ்விடத்தில், அதிக நாள் படித்து அரிய பெரிய விஷயங்களை அறியாவிடினும், கவனத்துடன் படித்து ஞானத்தை விருத்திசெய்யவேண்டு மென்ற பேரவா இவரை யடைந்து பெருகிற்று. ஆதலால், குடும்ப வேலைகளைச் செய்து முடித்தபின், வாசிப்பதிலேயே தன் மனத்தைச் செலுத்தி உழைத்தார். சிலேட்டு, பென்ஸில், காகிதம் முதலானவைகள் கிடைக்காததினால், அட்டைகளில் எழுதிப் படிப்பது வழக்கமாம். அதிகப் புத்தகங்க ளில்லாவிடினும், கிடைத்த புத்தகங்களைப் பழுதறப் படித்து முடிப்பது வழக்கமாம்.

இவருடைய பத்தாம் பிராயத்தில், இவருடைய தாய் மரித்துவிட்டதால், இவருடைய தகப்பனாராகிய டாமஸ் லிங்கன் ஒரு நற் குடும்பத்தைச் சேர்ந்த மிஸஸ் ஜான்ஸ்டன்

(Mrs. Johnston) என்றவளை மணந்தனன். பின், இக் குடும்பத்தினரின் தரித்திரம் சற்றுக் குறைந்து, இன்பம் அமைதி என்றவைகள் தலைக்கிளம்பின. இதர மாற்றாந் தாய்களைப் போலல்லாது, தன் குடும்பத்தினரை இவள் நன்கு ஆதரித்து வந்தாள். லிங்கனுடைய மனப்போக்கை அவள் நன்குணர்ந்தறிந்து தக்க உதவி புரிந்தாள். இவள் உதவியி னால், பனியன் எழுதிய பேரிலக்கியமும், (Bunyan's Pilgrim's Progress,) ஈசாப் என்பவர் இயற்றிய கட்டுக்கதைப் புத்தகமும் (Æsop's Fables) கிடைக்கப் பெற்று, அவைகளை நமது லிங்கன் வாசித்து முடித்தார். பின், வேறொரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று படித்தனராம். படித்து வருங்காயில், பற்பல வியாசங்கள் எழுதுவது வழக்கமாம்.

பூததயை மிகுந்தவராதலால், தன்னை வியந்தவரையி லும், கீழ்ப் பிராணிகளை இதரர் வருத்தாது பாதுகாத்து வருவராம். மேற்கூறிய நாட்டிலுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் ஆமைகளைப் பிடித்து, அவைகளை அதிவேகமாக ஓடச்செய்வதற்காக எரியுங் கரிகளை அவைகள் முதுகின்பேரில் வைத்துச் செலுத்தியதை இவர் பார்த்தவுடன் மனமுருகி, அத் துஷ்டர்களின் பழிப்பு வித்தனைகளைப் பொருட்படுத்தாது, அவர்களைத் துரத்தி, அவ் வாமைகளை விடுவிப்பாராம்.

ஞாபக சக்தி பொருந்தியவராதலால், தான் படித்தவைகளையும் இதரரிடமிருந்து கேட்டவைகளையும் ஒரு வார்த்தையேனும் விடாது மீண்டும் ஒப்பிப்பாராம். கதைகள் சொல்லித் தன் நாட்டினரை மகிழ்விப்பாராம். நற்குணமும் யுக்தி அல்லது சமத்காரமும் (Wit) உடையவராதலால், அந் நாட்டினரனைவரும் இவருடன் அந்நியோந்நியமாய்ப் பழகிவந்தார்கள். நாள் செல்லச் செல்ல, விவேகமும், அன்பும், இனிமையும் சோர்வடையாத ஊக்கமும் உழைப்பும், திடதேகமும் உடை

யுரராய் விளங்கினர். அந் நாட்டு இளைஞர்களும் கட்குடியிற் பிரவிர்த்தித் திழன்ற போதிலும், இவர் அத் தீமைக்குள் அகப்படவில்லை. பிறர் வியக்குமாறு, ஒழிவு நேரங்களிலும், மாலைப் பொழுதிலும், இரவிலும் படித்தவண்ணமாகவே இருந்தார்.

இச் சமயத்தில், அதாவது 1825-ம் வருடத்தில் ஜேம்ஸ் டாய்லர் என்ற வாத்தக னொருவனால் ஓஹியோ (Ohio) நதியைக் கடந்து வியாபாரஞ் செய்வதற்காக இவர் நியமிக்கப்பட்டார்.

பின் வேறொருவனிடம் வேலை பார்த்து வருகையில் இவருடைய நுண்ணறிவையும், நல்லொழுக்கத்தையும், மனப்போக்கையும் அவன் அறிந்து அதிசயித்து,இவருக்கு வேண்டிய புத்தகங்களைக் கொடுத் துதவினன். இவர் பின் ஒரு பெரிய கீர்த்திமானாக விளங்குவாரெனத் தன் சிநேகிதரிடம் வெளியிடுவானும். இவனிட மிருக்கையிற்றான், ஐக்கிய மாகாணங்களின் சரிதத்தையும், ஜார்ஜ் வாஷிங்டன், பென்ஜமின் ப்ராங்க்லின் முதலானவர்களின் ஜீவசரிதத்தையும் படித்துத் தேர்ந்தார். இச் சமயத்தில், ராஜாங்க சம்பந்தமான வியாசமொன்றும், மிதானுபோகத்தைப்பற்றி (Temperance)ஒரு வியாசமும் இவரால் எழுதப்பட்டு, ஓஹியோவி லுள்ள பத்திராதிபர்களால் பிரசுரிக்கப்பட்டன.

கொஞ்ச நாள் வரையிலும், தன் சொந்தப் படகில், கூலிக்கு, வியாபாரிகளின் சாமான்களை வேண்டிய இடங்களுக்குக் கொண்டுபோவதும், அவர்களுக்கு வேண்டிய பதார்த்தங்களை வாங்கி வருவதுமான வேலையைப் பார்த்துவந்தார்.

1830 - 1831 ம் வருடங்களில், வியாபாரத்தி னிமித்தம் இவர் ந்யூ ஆர்லீன்ஸ் (New Orleans) என்ற பட்டணத்திற்குச் சென்றிருந்து வருகையில், ஒரு நாள், சங்கிலியினுல்

பிணைக்கப்பட்டுக் குரூரமாக நடத்தப்பட்ட நீகிரோவர்களின் கூட்டமொன்றை இவர் கண்ணுற்றபொழுது, மனங் கசிந்து, அத் தீச்செயலை எவ்விதத்திலாவது போக்கவேண்டுமெனத் தீர்மானித்து, இதற்கான வழிகளைப் பற்றிப் பன்முறை ஆலோசிக்கலானார்.

பின், வேறொரு வணிகனுடைய பல சரக்குக் கடையின் அதிபதியாக லிங்கன் நியமிக்கப்பட்டு இருந்து வருகையில், இவர் பணிவும், நேர்மையும், வாய்மையும் பெருந் தகைமையும் பொருந்தி விளங்கியதால், நாட்டினர் அனைவரும் இவருடைய கடைக்கே வந்து சாமான்களை வாங்குவதும், இவர் கலாவல்லவரா யிருந்ததால், அவர்கள் சாமான் வாங்கிய பின்னும் இவருடன் சற்று நேரம் வார்த்தையாடிச் செல்வதும் வழக்கமாம்.

ஒரு சமயத்தில், ஒரு ஸ்திரீ சிற் சில சாமான்களை வாங்கி அதன் கிரயமாக இரண்டு டாலர் ஆறு ஸெண்டுகளைக் கொடுத்துச் சென்றாள். பின், இவர் தினசரிக் கணக்கைப் பரிசோதித்துப் பார்க்கையில், ஆறு ஸெண்டு அதிக மிருப்பதாகவும், இதைத் தவறுதலாய் மேற்கூறிய பெண்பிள்ளை யிடமிருந்து தான் வாங்கிவிட்டதாகவும் கண்டு, அன்றிரவே மூன்று மைலுக்கப்பாலிருந்த அவளுடைய வீட்டிற்குச் சென்று ஜாஸ்தியான பணத்தைக் கொடுத்து திரும்பினராம்.

வேறொரு சமயத்தில், இவர்கடையை மூடிக்கொண்டிருக்கையில், ஒருவளுக்கு அரைப் பவுண்டு தேயிலை கொடுத்தனர். மறு நாட் காலையில் வந்து தராசைச் சோதித்தபொழுது, அரைப் பவுண்டு தேயிலைக்கான விலையை வாங்கி, அறியாது கால் பவுண்டே கொடுத்திருப்பதாக அறிந்த வுடன், மீதியான கால் பவுண்டை நிறுத்தெடுத்து அவளுடைய வீட்டிற்கு ஓடிக் கொடுத்தனராம். இவருடைய சத்தியத்தை ரூபிப்பதான செயல்கள் பலவற்றுள் இவைகள் சில,

யாவர்க்கும் ஓர் இணையில்லாத நண்பனும், நுட்ப புத்தியும், அடக்கமும், தூய்மையும், உண்மையும், நற்குண வொழுக்கங்களும் பொருந்தியவராய், சரீரவன்மையும் மனவுற்சாகமும் கூடியவராய், சகல விதமான சண்டை சச்சரவுகளில் நடுவு நிலைமை தவறாத நீதிமானாய் விளங்கினார் நமது லிங்கன்.

1832-ம் ஆண்டில், தூரதிர்ஷ்ட வசத்தால், இவர் யஜமானனுடைய வியாபாரங்களெல்லாம் நஷ்டமாக முடிந்தமையால், அவன் மேற்கூறிய கடையையும் மூட நேரிட்டது. பின், இவர் வேறு வேலைக்குப் பிரயத்தனித்துக் கொண்டிருந்தார்.

இத் தருணத்தில், சில சிவப்பு இந்தியர் கூட்டத்தை யடக்க ஒரு சைனியம் எழுப்பப்பட்டு, அச் சைனியத்தின் சேனாதிபதியாக இவர் நியமிக்கப்பட்டதையும், இதினின்று ஜனங்களுக்கும் பட்டாளர்களுக்கும், இவர் மீது விசுவாசமும் அன்பும் உண்டானதையும்; இடையில், இவர்களிடம் அடைக்கலம் புகுந்த இந்தியன் ஒருவனை அப் பட்டாளர்கள் எதிரிகளின் ஒற்றனெனப் பாவித்து அவனைச் சுட்டுவிடத் தீர்மானித்த பொழுது, இதைத் தடுத்து, அவ் விந்தியனை நமது லிங்கன் காப்பாற்றியதையும்; பின், இல்லினாய் (Illinois) நகரின் ஜனப் பிரதிநிதியாக (Representative) வேண்டுமென அந் நகரவாசிகளால் வேண்டப்பட்டு இதற்கு முயன்று தோல்வி யடைந்ததையும்; இச் சமயங்களில் இவர் செய்த உபந்நியாசங்களையும்; பின் வேறொருவனுடன் கூட்டுவியாபாரம் செய்ய வாரம்பித்து, கடைசியில், அக் கூட்டுக்காரனுடைய மோசத்தினால் கடன் அதிகரித்தவுடன் அவன் ஓடவே, அக் கடனைத் தான் ஏற்றுக்கொண்டு, பின் அதைக் கொஞ்சங் கொஞ்சமாக இவர் திருப்பிக் கொடுத்ததையும்; இவ் விதம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபோதிலும், சுயவளர்ச்சியின் பொருட்டுப் படித்து வந்ததை நிறுத்தாது அறியவேண்டியவைகளை வாசித்துக் கேட்டுத் தெரிந்துகொண்டும் இருந்ததையும் விரிக்கின் பெருகும்.

(தொடரும்.)

தில்லைக் கோவிந்தன்.

Thillai Govindan

பதினோராவது அதிகாரம்

(தொடர்ச்சி)

இப்படியாக, சென்னைக்கு நான் திரும்பியபொழுது, என் குணம் மனோவிருத்திகள் யாவும் வெகுவாய் மாறியிருந்தன. அக்காலத்தில் நான் அடையக்கூடிய புகழை நாடி, மிக்க ஆவலோடும் ஊக்கத்தோடும் என் படிப்பில் இறங்கினேன்; இவ்வுழைப்பு மிகுதியால் கடுஞ்சுரம் கண்டு, விரைவில் பிணிப்படுக்கையை அடைந்தேன். அப்பொழுது என் சிற்றப்பன் ஊரிலில்லை; பட்டணத்தைச் சூழ்ந்துள்ள நிலங்களை அளந்து மேடுபள்ளங்களைக் கணிக்கும் வேலைமீது போயிருந்தான். என்றாலும், வைத்தியரின் திறமையினாலும், எங்களுடன் ஒட்டுக்குடியிருந்த என் சிற்றப்பனின் நண்பர் பக்ஷமுடன் செய்த போஷணையினாலும், சுரம் குணப்பட்டது. இவர் என்மேல் வாஞ்சையுள்ளவர்; நானும் அவரிடத்தில் தாராளமாய்ப் பழகிவந்தேன்; என் சிற்றப்பனிடத்திற் போல மட்டுமரியாதை, ஒளிவு மறைவு அவரிடத்தில் பாராட்டுவதில்லை. இவர் ஒரு வியாபார ஸ்தலத்தில் குமஸ்தாவாயிருந்தார். நல்ல ஆத்மா; ஸரஸி. ஜுரம் நீங்கி என் உடம்பு தேறிக்கொண்டு வரும் நாட்களில், ஒருநாள் சாயங்காலம், இவர் வீட்டுக்குத் திரும்பிவருமுன், ஆழ்ந்து தூங்கினவன் விழித்துக்கொண்டேன்; அதிக தாகமாயிருந்தது. எங்களுக்கு ஸகல வேலையும் செய்துவந்த மராட்டியனை "ரங்கா" என்று கூப்பிட்டேன்; பதிலில்லை; பொறுக்காமல் மீண்டும் மீண்டும் நான் உரக்கக் கூவவே, அவன் அறையிலிருந்து பிராமண

யுவதி ஒருத்தி வெளிவந்து, தூணுக்குப்பின் பாதி மறைந்து கொண்டு, ரங்கன் ஏதோ வேலையின் மேல் வெளியே போயிருப்பதாகச்சொல்லி, எனக்கு என்ன வேண்டுமென்று நாணிய குரலில் கேட்டாள். தாகத்துக்கு நீர் வேண்டுமென்று நான் பதில் சொல்லவே, அவள் எடுத்துவரப்போனாள். அவள் யார், எங்கள் வீட்டில் எப்படி வந்தாள் என்பது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. அவளோ இளம் பெண், பதினேழு வயதுக்கு மேலிராது; கட்டழகி என்று சொல்வதற்கில்லை எனினும், "மூவைந்து பதினைந்தானால் மூளியும் பெண்ணாவாள்" என்னும் பழமொழிக்கேற்க, இளமையும் திடசரீர ஆரோக்கியமும் கூடிய ஸ்திரீகளுக்குரிய மனங்கவர் வனப்புக்கள் யாவும் வாய்ந்தவளாயும், விகாரங்களேதுமின்றிக் கண்ணுக்கினியவளாயும் இருந்தாள். பிராமணப் பெண்ணானதால் ரங்கனுடைய மனைவியாயிருக்க முடியாது. அவன் அறையில் ஒரு வைப்பாட்டியும் அவனுடனிருப்பது எனக்கு அதுவரை தெரியாது. அந்த வீட்டிற்கு நான் வந்து பதினைந்து நாளுக்கு மேலாகியும், உண்மையில், அதில் ஒரு ஸ்திரீயும் இருப்பதை நான் எள்ளளவும் சந்தேகிக்கவில்லை. தம்ளரில் ஜலத்தைக் கொண்டு திரும்பிவந்து என் கையில் கொடுத்தபொழுது, நான் எவ்வளவோ பத்திரமாய் வாங்கியும், அவள் கை என் கைமேற் பட்டது; அப்போது அவள் நாணி முகஞ் சிவந்தவள்போல் ஜாலம்காட்டி, பின்பு புன்னகை செய்யவே அவளுடைய ஸ்பர்சமும் செய்கைகளும் புதியதோர் ஆவேசத்தால் என் உடம்பெல்லாம் பூரித்துச் சிலிர்க்கச் செய்தன. என் மனத்திலே உற்சாகம் பொங்கித் ததும்பிக் கொந்தளிக்க, வெறிகொண்டாற் போல என் இருதயம் படபடத்தது. நாக்குழறி மனந்தடுமாற, அவளை நீ யார் என்று கேட்டேன். "நானா, ரங்கன் கூட

இருக்கிறேன்; உங்களை எத்தனையோ தரம் பார்த்திருக்கிறேன்; தெரிந்துகொள்ள வேண்டும், உங்களோடு பேசவேண்டும் என்றும் எவ்வளவோ ஆசை'' என்று பதில் கூறி, அப் பொழுது எனக்கு ஜுரம் இருக்கிறதோ இல்லையோ என்று பார்க்கும் பொருட்டு, தனது கொழுத்த சிறிய கையை என் சட்டைக்குள் விட்டு, என்னைத் தொட்டுப் பார்த்தாள். உடனே காமவெறியினால் அவளை என் இருபுயங்களாலும், தழுவி மார்போடு வாரியணைத்துக் கட்டிக் கொண்டேன்.

* * * *

அவள் என் படுக்கையை விட்டு நீங்கிய நிமிஷமே நான் முற்றி வேறு பட்டுவிட்டேன். தகாதென்று விலக்கப்பட்ட கனியை உட்கொண்டவனானேன்; அதன் பிற்சுவை தாங்கமுடியா வண்ணம் அருவருப்பாயிருந்தது. அப்பொழுது நான் உற்ற மனக்கசப்புக்கு ஈடெதிர் உண்டோ! என்றுமே, சாந்தினை யுமே என்னால் அதை மறக்கொணாது. என் மனைவியின் உருவமும், என் அதிஷ்டான தேவதையான மற்றவளின் உருவமும் என் மனத்துள் இப்பொழுது விரைந்து வந்து புகுந்தன, விஷந்தீட்டிய பாணங்களைப்போல, விசனமும் நிந்தையும் நிறைந்த அவர்களுடைய நோக்கங்கள் என்னைச் சித்திரவதை செய்யலாயின. நான் செய்திருந்த விரதபங்கத் தாலுண்டான அவமானமும் கிலேசமும் என் மனத்தை ஆழ்த்தி வருத்தலாயின. என்னில், நித்தியமான தெய்வீக மான அம்சத்தை மீட்க முடியாதவாறு நான் இழந்துவிட்ட தும், எஞ்சிநின்றது மிருக சுவபாவமானதே என்பதும், எனக்குப் புலப்பட்டது. இனி என்றுமே, அவளுடைய இருதயம் போல் நிஷ்களங்கமானதும் தீங்கற்றதுமான பரிசுத்த இருதயத்தை, என்னால் என் மனைவிக்குச் சொப்ப னத்திலும், அர்ப்பிக்க முடியாதே. எங்கள் புதுமணப் பாயல்

தூயதோர் கன்னிச்சுவர்க்கமாய் விளங்கும் என்று, இரவு பகல் என்பதின்றி, நான் ஸர்வதா எண்ணி எண்ணிக் கனவு கண்டு களித்துக் கொண்டிருந்ததெல்லாம் பாழாய் விட்டதே! சற்று முன் பூர்ணசந்திரன் போல் பிரகாசித்த எனது நற்பெயர் இப்பொழுது, இனி என்றுமே தூயதாக்க முடியாத வண்ணம் கறையுண்டு கரியாகிவிட்டதே. அந்தோ! என்ன கொடுமை!

'நாட்கள் வாரங்களாகி, வாரங்கள்
மாதங்களாகி, மாதங்கள் பல கூடி
வருஷங்களாகி, ஆண்டுகள் பல சென்று
நூற்றாண்டுகள் ஆயினுமே, என்றுமே
என் பெயர் நிந்தைக்கோர் இலக்காகவே
நிற்குமன்றோ.'

கல்யாண முகூர்த்த சமயத்திலும் அதற்குப்பின் நடந்த வைதிக சடங்குகளிலும், ஒருவர் பக்கலில் ஒருவராய், கையில் கைபிடித்து ஆஹிதாக்னிமுன் நாங்கள் நின்றபோது, தன் காதலை எனக்கு எப்பொழுதும் ஞாபகப்படுத்தும் அறிகுறியாய் என்கையை மெல்ல அழுக்கி, வெட்கிய முகத்துடன் இனிமையாய்ப் புன்னகை செய்த அழகியான எனது கட்டிளக்கன்னி மனைவி இப்பொழுது என்னைப்பற்றி என்ன நினைப்பாள்? என் அதிஷ்டான தேவதையான மற்றவளும் என் மேனி கறைப்பட்டு மாசுண்டதை அறிந்தபோது என்ன நினைப்பாள்? ஏனெனில், என் முகத்தை நோக்கிய மாத்திரத்திலே யாவரும் என்னைப் பாபிகிருத்தியன் என்று சுட்டிக் காட்டுவார் என்பதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை. அக்குற்றம் என் முகத்தில் துடைக்க முடியாதபடி கல்வெட்டுப் போல் பதிப்புண்டு விட்டது. அதை ஒருபொழுதும் மாற்ற முடியாது என்றே எனக்குத் தோன்றிற்று.

அந்தோ! உண்மையில் நான் என்ன செய்துவிட்டேன்! ஒரு விநாடி சுகத்திற்காக என் வாழ் நாளின் முற்றின்பத்தையும் பாழாக்கிவிட்டேனே. நான் செய்த பாபகிருத்தியம் அவ்வளவு கொடியதல்லவென்றும், என் பெயரைக் கெடுக்க வந்த மாசு அவ்வளவு இருண்டு கரிதியதல்லவென்றும், போலி நியாயம் உண்டுபண்ணிக்கொண்டு, அவள் என்மீது உண்மையான காதல் கொண்டவள் என்று வழக்குரைத்து என்னையே யான் ஏமாற்றிக் கொள்ளாவண்ணம் தடுப்பவள்போல், கொழுந்துவிட்டு எரிகிற தீயில் எண்ணெய்யை வார்ப்பாள் போல், தீங்கொன்றுமே அறியாத களங்கமற்ற எனது தூய்மையையும் ஆனந்த நிலையையும் குலைத்து நாசம் செய்த அந்த மோசக்காரி, மீண்டும் என் படுக்கைக்கு வந்து என் பக்கத்தில் உட்கார்ந்து என்மீது சாய்ந்துகொண்டு ஒரு வாரத்திற்குப்பின் திரும்பத் தருவதாக இரண்டு ரூபாய் கடன் கேட்டாள். அவள் திரும்பிவந்ததை நான் முதலில் கவனிக்கவில்லை. பிறகு, மனம் வருந்தி யோசனையில் ஆழ்ந்திருந்தவன் விழித்துக்கொண்டு, அவள் அருமையாய் அணைக்கவந்த கைகளைப் புறத்தே உதறித் தள்ளி, அவள் முகத்தை நான் விழித்துப் பார்க்கவே, என்னை ஒருநிமிஷம் உற்றுப் பார்த்துவிட்டுப் பயந்து, அதிவேகமாய் உடனே பின்வாங்கி, அவள் போய் விட்டாள். ஏனெனில், அவள்மீதும், சற்றும் யோசனையின்றி என்வழியே அவளை விடுத்துவைத்த என் சிற்றப்பன்மீதும் உயிர்ப்பழி வாங்கியபின், என்னையுமே மாய்த்துக்கொள்வதென்று அப்பொழுதுதான் நான் ஆழ்ந்து யோசனை செய்துகொண்டிருந்த சமயம். விரதபங்கம் செய்த பாபகிருத்தியத்தைச் செய்யுமளவு மனக்கோழைமையுள்ளவனே எனினும், அதற்காகப் பிறகு மனம் வருந்தி, பாபத்தின் விளைவாகும் மரணத்தை ஏற்குமளவு மனோதைரிய

முழுமுள்ளவன் என்பதை, என் அதிஷ்டான தேவதைக்கும் என் மனைவிக்கும் அவ்வாறுசெய்து ருசுப்படுத்தி, அதனால் அவர்களுடைய விசனத்தோடும் கூடிய அநுதாபத்தையும் மெய்ப்பாட்டையும் அடைய நினைத்தேன்; தன் மனமே தன்னை இகழ, அவமானத்தோடு உயிர் வாழ்வதினும் அதையே மேலாக மதித்தேன். அந்தப் பெண்ணின் சொற்கள்,என் மனக் கசப்பை எவ்வளவோ அதிகப்படுத்தின. ஏனெனில், கோலாற்றுத் தங்கச் சுரங்கங்கள் இரண்டு கிடைப்பதா யிருப்பினுமே என் மனதார (என்னுடையதும் என் மனைவியினதுமான) எங்களிருவருடைய வாழ்க்கை பின்பத்தை நான் விட்டுக் கொடுத்திருக்க மாட்டேன்; அப்படிப்பட்ட அருமைப்பொருளை, அந்தோ! கேவலம் இரண்டு ரூபாயே மதிப்பான அற்பசுகத்துக்காக விற்றுத் தொலைத்து விட்டேனன்றோ. இனியென்ன, பாபமோ பண்ணியாய் விட்டது; இப்பொழுது அதன் பலனை அநுபவிக்கவேண்டியதே. நான் பிறர் மதத்தில் கட்டுப்படாது சுயேச்சையாய் இருந்தவன்; புத்திசாலி; இங்கர்ஸால், பிராட்லா, பிசண்ட், ஹக்ஸ்லி, டின்டால், டிரேபர், முதலிய பெரியோரின் சிஷ்யன்; தனக்குள் தானே யோசனைசெய்து காரணங்கண்டு தெய்வம் ஒன்று இருக்கிறது என்பதையே மறுக்கத் தைரியம் கொண்டவன்; சுய நாட்டில் புராதனமாய் சிலாகிக்கப் பட்டுவரும் ஏற்பாடுகளில் மதிப்பிட்டுக் குற்றம் குறைகாணுமளவு துணிந்தவன்; இத்தகைய பராக்ரமபுத்தி வாய்ந்த மேதாவியாகிய நான் உலகத்திலே மற்றெவருமே கிர்ப்பந்தமாய்ச் செய்விக்க முடியாத ஒரு பாபகாரியத்தை நானாகவே மனங்கொண்டு செய்தபின்பு, அன்றாடம் வயறு வளர்க்க வேண்டித் தன் மானத்தை விற்கும் அபலையான ஒரு மூடப் பெண்ணையும், அக்காலத்தில் காதவழி தூரத்துக்கு அப்பா

விருந்த என் சிற்றப்பனையும் அதற்காகப் பழி கூறுவது எத்தனை அநியாயமாகும்! இவ்வெண்ணம் பிறக்கவே, ஒரு பயங்கரமான புன்னகையும் தானாகவே உண்டாயிற்று; பிறகு, பாபம் செய்தவன் மட்டுமே அப்பாபத்தின் பலனை யடைய வேண்டுமாதலால், என் உயிரை மாய்த்துக்கொள்ளத் தீர்மானித்தேன். ஆயினும், அப்படிச் செய்யுமுன், நானும் இதற்கு ஒருவித காரணம் என்பதை என் சிற்றப்பன் அறிய வேண்டும் என்று விரும்பினேன். அதில் ஒருவித குரூரமான திருப்தி யுண்டன்றோ? நியாயநிமித்தம் பிராணனைத் துறந்தவன் என்று பிறரறிய வேண்டுமென்ற அபிலாஷை யாருக்குமுண்டன்றோ? ஆகையால், என் சிற்றப்பனுடைய நண்பர் வரும்வரை காத்திருந்து, அவரிடம் எல்லாம் சொல்லி, பிறகு, பயனற்ற வெறுக்கத்தக்க பூபாரமாய் உயிர்தாங்கியிராமல் என்னை மாய்த்துகொள்வதென்று தீர்மானித்தேன்.

என் சிற்றப்பனின் அன்பர் தமது பண்டசாலையினின்றும் சாயங்காலம் திரும்பிவரும்வேளைக்குள் இப்படியாகப் பித்தாவேசம் மேலிட்டுக் கடுமையான சுரம் கண்டுவிட்டது. அவர் வந்ததும் யானிருக்கும் அவஸ்தையைக் கண்டு உடனே வைத்தியரை அழைத்துவந்தார். அவரும் சற்றுப் பயந்தவராய் இப்படித் திடீரெனக் காரண மின்றி மீண்டும் வியாதி மேலிட்டதைக் கண்டு என் சிற்றப்பனுக்கு ஆள்விடச்சொன்னார். இப்படி ஜுரம் திரும்பியது எனக்கு ஒருவாறு சந்தோஷந்தான். தற்கொலைசெய்து கொள்ளவேண்டிய சிரமம் லாபம் என்று எண்ணிக்கொண்டேன். சுரம் வரவர அதிகரித்தது. என் சிற்றப்பன் திரும்பி வரும்போது ஜன்னிகண்டு புலப்பம் ஏற்பட்டுவிட்டது. என் ஸ்திதியைக்கண்டதும், அவன் மிக்க பயங்கொண்டு, என் தாய்தந்தையருக்குத் தந்தி அனுப்பினான். அந்தப் புலப்பத்தில், என் கன்னி மடமையைக் கெடுத்து தங்களைப்போல் கட்

டுக்கடங்காத விடனுகை என்னையும் ஆக்க என் சிற்றப்பனும் அவன் நண்பனும் துரெண்ணம் கொண்டார்கள் என்று அவர்கள் மீது குற்றம் கூறினேன் என்றும், அந்தப் பெண்ணைப் பற்றி வருந்தியும் சிலாகித்தும் பழிகூறியும் மாறி மாறிப்பிதற்றினேன் என்றும் பின்னால் என்னிடம் அவர்கள் சொன்னார்கள். வேறு என்ன புலம்பினேனோ, முக்கியமாய் என் மனைவியைப்பற்றியும் என்காவல் தெய்வத்தைப் பற்றியும் என்ன பிதற்றினேனோ, அதை அவர்களிடமிருந்து அறியமுடியவில்லை. ஆனால் அதற்கு மூன்றுநாள் எனக்கு மறுபடி ஸ்மரணை உண்டாகி என் தாய்தந்தையரும் என்னைப் பார்க்கவந்தபோது, மாட்டிய வேலைக்காரனும் பிராமணப் பெண்ணும் வீட்டைவிட்டுப் போய்விட்டார்கள். அதற்குப்பின் ஒருபோதும் நான் எங்கேனும் அவர்களைக் கண்டதில்லை. தந்தி கிடைத்த நிமிஷமுதல் பட்டினியாய் ஓயாமல் துக்கித்து அழுதுகொண்டிருந்த என்னருமைத் தாய்தந்தையர், என்னை உயிருடன் காணவே ஆனந்தக்கண்ணீர் வடித்து, ஒரு பக்ஷகாலம் நான் மறுபடி கலாசாலைக்குப் போவதற்கு வேண்டிய பலமடையும்வரை, என்னைவிட்டுப் பிரியாது கூடவிருந்து, பிறகே ஊருக்கு திரும்பிச் சென்றார்கள்.

ஐயவினாவிடை

Answers to Questions

கற்களின் வளர்ச்சி

இவ் வுலகத்தில் காணப்படும் பலவகைப் பொருள்களும் ஒன்றை யொன்று சிறிது சிறிது ஒத்திருக்கின்றன வன்றிப் பொதுவாகத் தம்முள் பெரிதும் வேற்றுமைப் பட்டிருக்கின் றன வென்னும் உண்மையானது தத்துவ ஞானிகளாலும் சாஸ்திர ஞானிகளாலும் நன்கு உணரப்பட்டிருக்கிறது.

மனிதர்கள் வளர்வதைப் போல் எல்லா உயிர்களும் வளர்வதில்லை. பொதுவாக மனித வருக்கத்தில் குழந்தை யானது மனித வருக்கத்துக்குரிய பல உறுப்புக்களையும் கொண்டு, மனித உருவத்துடனேயே பிறக்கின்றது. பக்ஷி ஜாதிகளிலோ வெனில் பிறக்கும் முட்டை சிறிதும் பக்ஷியை ஒத்திருப்பதில்லை. பின்பு அதனின்று வெளிவரும் குஞ்சும் சிறிது சிறிதே தன் இன உருவத்தைப் பெற்றிருக்கிறது. வண்ணாத்திப் பூச்சி முதலியன வற்றின் ஜீவசரிதை இன்னும் விந்தையானது. தாவரங்களெனப்படும் புல் பூண்டு முதலியன வற்றின் வளர்ச்சியானது உயிர்ப் பிராணிகளின் வளர்ச்சியைச் சிறிதும் ஒத்திருப்பதில்லை. தாவர வருக்கத்தில் புல் பூண்டுகளிலும் கீழான கற்களின் வளர்ச்சி யானது இவற்றிலொவ்வொ வற்றினின்றும் முற்றிலும் மாறு பட்டிருக்கிறது.

மேற் கூறியவற்றைச் சிறிது ஊன்றி நினைத்துப் பார்த் தால் வளர்ச்சி யென்பது ஒரு வகைப்பட்டதல்ல வென்பது

தெளிவாகும். பொதுவாக வளர்ச்சி யென்பது அளவில் அதிகப்படுவதைக் குறிக்குமென்று கூறலாமாயினும் சிற்சில வகைப் பிராணிகளுள் முற்றிலும் வளர்ந்த பிராணியானது அது நடுவே அடையும் சில உருவங்களைக் காட்டிலும் அளவில் சிறியதாக இருக்கின்றமையால் வளர்ச்சி இன்னது என்று தெளிவாக அறிவது எளிதல்ல.

ஆதலால் கற்கள் வளர்கின்றன என்றபோது கற்கள் அளவில் பெரிதாகின்றன என்பதே குறிக்கப்பட்டது. இதிலிருந்து எல்லாக் கற்களும் எல்லாக் காலங்களிலும் வளர்கின்றன என்று நினைக்கலாகாது. அவை வெவ்வேறு உருவங்களைப் பெறுகின்றன என்ற போதும் அவை அவற்றின் தன்மைக்குத் தகுந்தவாறு உருவ மாறுபாடுகள் அடைவதாகப் பொருள்படுத்த வேண்டுமே யல்லாது நினைத்த உருவங்களை யெல்லாம் பெறுகின்றன என்று நினைக்கலாகாது.

கற்களின் வளர்ச்சிக்குப் பொதுவாக பூமியின் நெருக்கமும், அதற்குக் காரணமாகும் பூகம்பம், முதலியனவுமே காரணங்களென்று கூறலாம். பூமியின் மேல் மட்டத்தில் சிற்சில விடங்கள் பிறவிடங்களை விடக்கனம் குறைந்துபோன காரணத்தாலும் பிற காரணங்களாலும் அவை சுற்றிலுமிருந்து நெருக்குண்டபோது அவை மேலெழுகின்றன. பூமியில் காணப்படும் மலைத்தொடர்களில் பல இத்தகைய நெருக்கத்தாலேயே உண்டாயிருக்கின்றன. இமயமலை போன்ற சில மலைகள் இன்னும் இவ்வாறு நெருக்குண்டு வளர்ந்து வருவதாகப் பூகத்துவ நூலாராய்ச்சியர் கூறுகின்றனர். இந் நெருக்கத்தால் மேன்மேலும் அதிகமான பூமியின் வஸ்துவானது கல்லாக மாறி மலைப் பொருளோடு சேர்ந்து அதன் வளர்ச்சிக்குக் காரணமாகிறது.

கற்கள் மற்றொரு விதமாகவும் வளர்கின்றன வென்று கூறலாம். இப்பொழுது அழுத்தமான கல்லாக விருக்கும் பொருளானது முன்னொரு காலத்தில் உருகி நீரைப்போல ஓடிக்கொண்டிருந்திருக்கவேண்டுமென்று வான நூற்பண்டிதரும், பூதத்துவ நூற்பண்டிதரும் கூறுகின்றனர். இப் பொருளானது வரவரக் குளிர்ந்து ஒழுங்காக இறுக இறுக அதன் மூலப் பொருள்களுக்கு ஏற்றவாறு சிற்சில வேளைக ளில் குறிப்பிட்ட சில ஒழுங்கான உருவங்களைப் பெற்றிருக் கிறது. இவற்றை க்றிஸ்டல் (Crystal) என்று ஆங்கிலத் தில் கூறுகிறார்கள். இவ்வாறு உறைவதால் உண்டாகும் ஒழுங்கான உருவங்களைப் பற்றி இங்குவிவரிப்பது முடியாது.

பொதுவாக இவை முதன் முதலில் மிக நுண்ணிய உரு வங்களைப் பெறுகின்றன. இவ் வுருவம் ஒவ்வொன்றும் மேற் கூறியபடி மூலப் பொருளுக்கு ஏற்றவாறு ஓர் ஒழுங்கை அனு சரித்திருக்கிறது. இவ் வுருவம் ஒவ் வொன்றும் ஒரு நுண் ணிய க்றிஸ்டல். ஒவ்வொரு க்றிஸ்டலும் நியமத்துக்குள்பட் டுப் பல பட்டைகள் போட்டது போலிருக்கும். ஒரே அளவு ஒரே வகை மூலப்பொருள்கள், உறைவதால் உண்டாகும் கிறிஸ்டல்கள், சீதோஷ்ணம், நெருக்கம் முதலிய மற்றவைக ளும் அதிகம் மாறுபடாதிருந்தால், ஒரே வகையான ஒழுங் கான பட்டைபோட்ட உருவத்தையே பெறுகின்றன. பின்பு இந் நுண்ணிய க்றிஸ்டலின் ஒவ்வொரு பட்டையின் மீதும் அதே வகைக் கற்பொருள் படிந்து உறைய உறைய அந்தக் க்றிஸ்டலானது உருவத்தில் தன்னைப் போன்றும் அளவில் மட்டிலும் பெரியதாயுமுள்ள க்றிஸ்டலாக மாறுகிறது. இது வும் கல்லின் வளர்ச்சி யல்லவா?

கற்கள் இன்னொரு விதமாகவும் வளர்கின்றன. நீரோ டைகள், ஆறுகள் முதலிய நீரோட்டங்கள் கல்லாக மாறக்

கூடிய பொருள்களை எடுத்துச் செல்லுகின்றன. அவற்றுள் கனமான பொருள்கள் முதலிலும், படிப் படியாக கனம் குறைந்த பொருள்கள் பின்னுமாகப் படிகின்றன. தரம் தரமாக இவ்வாறு பிரிக்கப்பட்டுப் பின்பு ஒன்று சேரும் ஒரே வகையான கற்பொருளானது மேன்மேலும் படியும் பொருளின் கனத்தாலும் இயற்கைச் சக்திகள் பிறவற்றின் உதவியாலும் வர வர இறுகி நெருங்கி ஒன்று சேர்ந்து கல்லாக மாறுகின்றது. இவ் வகைக் கல்லுக்கு முன் கூறிய இருவகைக் கற்களின் வன்மை இருக்காதென்பது சொல்லாமலே அறியக்கிடக்கின்றது. மேலும் இது தகடு தகடாகப் பிரிக்கக் கூடியது. இதற்குக் காரணம் இது படிப் படியாகக் கல்லாக மாறுவதே. முதலில் ஒரு தகடு போன்ற கல், பின்பு அதன்மேல் மற்றொரு தகடு, பின்பு ஒரு தகடு இவ்வாறு நாள் செல்லச் செல்லத் தகடுகள் அதிகப்பட்டுக் கல் வளருகின்றது.

அ.

தமிழ்ச் செல்வம்.

Tamil Classics.

62. கைகேயி ஸோகஸம்.

“கூனி போன பின், குலமலர்க் குப்பை நின்றிழிந்தாள்;[1]
சோனைவார்குழல் கற்றை[2]யில் சொருகிய மாலை,
வானவார்மழை நுழைதரு மதி பிதிர்ப்பாள் போல்,[3]
தேன் அவாவுறு வண்டினம் அலமரச் சிதைத்தாள்;

“விளையும் தன்புகழ் வல்லியை வேர் அறுத்தென்ன,
இலைகொள் மேகலை சிந்தினள்; கிண்கிணியோடும்,
வளை துறந்தனள்; மதியினில் மறுத் துடைப்பாள் போல்,
அளகவாள்நுதல் அரும்பெறல் திலதமும் அழித்தாள்;

“தாவில் மாமணிக்கலன் மற்றும் தனித்தனிச் சிதறி,
நாவி[4] நன்குழல் நானிலம் தைவர[5]ப் பரப்பி,
காவி உண்கண்கள் அஞ்சனம் கான்றிடக் கலுழா,
பூ உதிர்ந்ததோர் கொம்பென, புவிமிசைப் புரண்டாள்;

“நவ்வி[6] வீழ்ந்தென, நாடகமயில் துயின்றென்ன,
கவ்வை[7] கூர்தர, சனகியாம் கடிகமழ் கமலத்து [தை,
அவ்வை[8] நீங்குமென்று அயோத்தி வந்து அடைந்த அம்மடந்
தவ்வை[9] யாமெனக் கிடந்தனள் கைகயன் தனையை[10]”—

கம்பராமாயணம்.

---

1. புஷ்பசயனத்தை விட்டிறங்கினாள் 2. பெருமழை போன்ற நீண்ட கரிய அளகபாரம் 3. மல்லிகை பிச்சி முதலியவற்றால் இணைத்தமாலை சந்திரனுக்கு உவமையாயிற்று 4. கஸ்தூரி 5. தரையிற்கிடந்து புரள 6. மான் 7. துன்பம் 8. தாய் 9. தமக்கை 10. மகள்.

கூனியினது துர்ப்போதனையால் மதிமயங்கி, பரதனுக்குப் பட்டங்கட்டி இராமனைக் காட்டுக்குத் துரத்தும்படித் தனது கணவனும் சக்கரவர்த்தியுமான தசரதனைத் தூண்டத் துணிந்த கைகேயி தசரதனது வரவை எதிர்நோக்கி, தனது சயன க்ருகத்தில் தன்னையேதான் அலங்கோலஞ் செய்துகொண்டதை, இச்செய்யுள்களில் கம்பர் வருணித்திருக்கிறார். அழகிற் சிறந்த காந்தாரதேசத்தாளாகிய அவளை, பூங்கொடி மான் மயில் முதலிய வற்றோடு உவமித்துக் கூறி, அவள் வேண்டுமென்று செய்துகொண்ட அலங்கோலங்களையும் அதற்குப் பொருந்திய உவமானங்களால் வருணித்தது மட்டுமன்றி, மலர்மாலை ஆபரணங்கள் நெற்றிப்பொட்டு முதலியவற்றை நீக்கித், தலைமயிர் கீழேகிடந்து புரள, அழுது சிவந்தாற் போன்ற கண்களுடன் தரையின்மேல் வீழ்ந்து கிடந்த ஸாகவியை, பூக்கள் எல்லாம் உதிர்ந்து வறியதான பூங்கொம்பும், லக்ஷ்மியின் அவதாரமான சீதையானவள் மறுநாள் அயோத்தியை நீங்கி வனம் புகப் போவதை முன்னரே அறிந்து அவளை வழியனுப்பவேண்டி அந்நகரத்தை வந்தடைந்த மூதேவிக்கும் ஒப்பிட்டிருப்பது, சால அழகிது.

அ. மா.

சதுரங்க ஆட்டப் புலவர்.

An Amazing Chess Player.

டெய்லி மெயில் என்னும் பத்திரிகையில் பின்வருமாறு எழுதியிருக்கிறது.

சதுரங்க ஆட்டத்தில் மிக்கக் கியாதிபெற்றவர் ஸேனர் காபபிளாங்கா (Senor Capablanca) என்னும் ஒருவர். இவருக்கு இப்பொழுது சுமார் முப்பது வயதிருக்கலாம். இவர் அமெரிக்காவின் பக்கத்திலுள்ள க்யூபா (Cuba) என்னும் தீவில் பிறந்தவர். இவர் சென்ற பத்து வருஷங்களாகவே இந்த ஆட்டத்தில் மிக்க பாண்டித்திய முடையவராகக் கருதப்பட்டு வருகிறார். இவர் இருபது வருஷங்களுக்கு முன், அதாவது இவருடைய பத்தாவது வயதில், பெரிய சதுரங்க ஆட்டத்தி லொன்றில் வெற்றி பெற்றனராம். இவருடைய நான்காவது வயதிலேயே தன் தகப்பனை இந்த ஆட்டத்தில் பல முறை தோற்கடித்திருக்கிறாராம்.

இவருக்குப் பத்துவயதா யிருக்கும்பொழுது இவர் ஹாவனா (Havana) வில் நடந்த ஒரு சதுரங்கப் பந்தய ஆட்டம் (Tournament) ஒன்றில் ஆடினாராம். அப்பொழுது க்யூபா தீவில் எல்லாரிலும் மிக்க பண்டிதனாகக் கருதப்பட்டு வந்த கார்ஸோ (Corso) என்பவனால் இருமுறை தோல்வியடைந்தாரே யன்றி மற்றெல்லாரையும் தோற்கடித்து விட்டனராம்! இச் சிறு பையனுடைய சாமர்த்தியத்தைக் கார்ஸோ வியப்புடன் கண்டுகளித்துக் கொண்டாடியதால் இவரிருவருக்கும் ஒரு பந்தய ஆட்டம் வைத்ததில் கார்ஸோவையும் இவர் தோற்கடித்து விட்டனராம்.

பள்ளிப்பருவம் நீங்கியதும் இவர் சுரங்கங்களை வெட்டிய சிற்பநூலைக் (Mining Engineering) கற்கத் தொடங்கினராம். நேரம் போக்குதற் பொருட்டே சதுரங்கம் ஆடிவந்தனராம். வர வர அவ் வாட்டத்தில் மிகக் கை தேறினராம்.

1909-ம் வருஷத்தில் இவர் ஐக்கிய மாகாணம் முழுவதும் சென்று போனவிடமெங்கும் சதுரங்கம் ஆடிவந்தனராம். அப்பொழுது இவர் பொதுவாக ஒவ்வொரு ஆட்டத்தையும் தனித்தனியாக ஆடுவதில்லையாம். ஒரே சமயத்தில் பலரோடு வெவ்வேறு சதுரங்கப் பலகைகளில் வெவ்வேறு ஆட்டம் ஆடுவராம். அம் மாதிரி இருபத்தைந்து பேருக்கு மேற்பட்டு நாற்பத்தெட்டுப்பேர் வரையில் இவரோடு ஒரே சமயத்தில் சதுரங்கம் ஆடுவார்களாம். இவர்கள் ஒவ்வொருவரும் நன்கு யோசித்து ஒரு சதுரங்கக்காயை நகர்த்துமுன் இவர் ஒவ்வொரு பலகையாகச் சென்று, சிறிதும் யோசியாதவர்போலவே காய்களை நகர்த்திச் செல்வாராம். இவ்வாறு இவர் சதுரங்க திக்விஜயம் செய்துவரும்போது மொத்தம் ஐந்நூற்றித் தொண்ணூறு ஆட்டங்கள் ஆடினராம். அவற்றுள் ஐந்நூற்று அறுபதில் இவர் ஜயித்தனராம். பன்னிரண்டில் மட்டுமே தோல்வியுற்றனராம் ! பிறகு அமெரிக்கா தேசத்தில் இந்த ஆட்டத்தில் முதன்மை பெற்றிருந்த மார்ஷல் (Marshall) என்பவரோடு இருபத்தோரு ஆட்டம் ஆடியதில் எட்டு ஆட்டங்களில் இவர் ஜயித்தனர், ஒன்றில் தோல்வியுற்றார், மற்றப் பன்னிரண்டும் ஒருவருக்கு மில்லாமற் போயிற்றாம்.

இரண்டு வருஷங்களுக்குப் பின்பு ஐரோப்பாவிலெங்கும் திக்விஜயம் செய்துவந்தாராம். அவ்வாறு சென்றபோது இவர் அதிக அபஜய மடைந்தார் என்று சொல்லத்தகுந்தது

லண்டன் மாநகரில் தான். அங்கு இருபத்தெட்டுப் பேரோடு ஒரே சமயத்தில் ஆடியபோது பதினாறு ஆட்டங்களில் தாம் இவர் ஜயித்தனராம். இது அபஜயமானால் ஜயம் எது ?

1913-ம் வருஷத்தில் க்யூபா தேசத்துத் துணைக் கான்ஸல் (Consul) உத்தியோகத்தைப்பெற்று ருஷியாவின் ராஜதானியாகிய ஸெண்ட் பீடர்ஸ் பேர்க் (St. Petersburg) நகரத்திற்குச் சென்றார். அங்கு 1914-ம் வருஷத்தில் சதுரங்கத்தில் உலகப் பிரசித்திபெற்ற லாஸ்கேர் (Lasker) என்பவரோடு ஒரு பந்தய ஆட்டம் ஆடினார். அதில் இவர் ஆடிய ஆட்டம்தான் மேன்மையான ஆட்டம் என்று இந் நாளும் சதுரங்க பண்டிதர் கூறுகின்றனரெனினும் அதில் இவர் தோல்வியுற்றார். இவ்வாறு இவர் தோல்வியுற்ற ஆட்டங்களின் எண்ணம் மிகக் குறைவென்பது எடுத்துக் கூறவேண்டியதில்லை. பிறகு இன்னொருமுறை லண்டன் மாநகரில் ஒரே சமயத்தில் இருபத்தெட்டுப் பேரோடு ஆடியதில் இருபத்தொன்றில் ஜயித்தனர். மூன்றில் தோல்வியுற்றனர், நாலைப் பகிர்ந்தனர்.

இத்தகைய பெரும் ஆட்டங்கள் ஆடும்பொழுது இவர் பலகை பலகையாகச் சென்று, சிறிதுகூடத் தாமதியாமல் சதுரங்கக் காய்களை நகர்த்துவது மிகவும் வியக்கத்தக்கது. சாதாரணமான ஒருவன் ஊன்றிக் கவனித்தாலன்றி அறியக்கூடாத ஆட்டத்தின் போக்கு முழுவதையும் இவர் பலகையைப் பார்த்த உடனேயே அறிந்துகொள்ளுகிறாராம். ஆட்டத்தின் பலாபலம் அவ்வளவு எளிதாக இவருக்குப் புலப்பட்டுவிடுகிறதாம். ஊன்றி நினைப்போராலேயே ஆடத்தகுவது இஃது என்று சிறப்புற்ற இந்த ஆட்டத்தை இவர் மிகவும் எளிதானதாகவே கருதுகின்றனர். இவரது மூளைத்திறம்

அப்படி வாய்ந்திருக்கிறது. ஊன்றி ஊன்றி நினைத்து விளையாடும் எதிரிகளின் வன்மையானது மின்னொளி தோன்றுவதுபோல் திடீரென விளையாடும் இவர் முன் நிற்க முடிகிறதில்லையாம். ஆதலால் இவர் பேச்சை எடுக்கும்போதெல்லாம் சதுரங்க நிபுணர் யாவரும் மிகவும் பரிவோடும், தணிவான குரலுடனுமே பேசுகின்றனராம்.

அ.

குறிப்புக்கள்.
Notes
கறைகளை நீக்கும் உபாயங்கள்.
To Remove Stains.

நாம் உணவுப் பொருள்களை உட்கொள்ளும் பொழுதும் திரவப் பதார்த்தங்களைப் பருகும்பொழுதும் சிற்சில வேளைகளில் நமது அசாக்கிரதை யாலோ நமது பக்கத்திருப்போரின் அசாக்கிரதையாலோ அல்லது எதிர்பாராச் சம்பவங்களாலோ நமது உடையின்மீது அப்பொருள்கள் விழுந்து அவற்றை அசுத்தப்படுத்துகின்றன. தண்ணீர் போன்றவை சில அவற்றைக் கறைப்படுத்துவதில்லை. காபியைப் போன்றவை சில நீரில் கழுவினும் எளிதில் மறையாத கறைகளை உண்டாக்கி விடுகின்றன. இவற்றுள் சிற்சில கறைகளை நீக்குதற்பொருட்டுப் பின்பற்ற வேண்டிய முறைகளைச் சிறிது கீழே சொல்லுகிறோம். இங்கு குறிப்பிட்ட உபாயங்களைத் தவிர வேறு உபாயங்கள் இல்லை என்றாவது, அல்லது எல்லா முறைகளிலும் இவைதாம் மேன்மையானவை யென்றாவது நாம் கூறுவதாக எண்ணக் கூடாது.

காபி, டீ, கோகோ.

இக் காலத்தில் இவற்றில் யாதானும் ஒன்றை வழக்கமாகப் பருகிவராதவர் குறை. பொதுவாக இவற்றால் கறைப்படுத்தப்படாத வஸ்திரங்களும் குறையென்று கூடச் சொல்லலாம். இவற்றால் ஏற்படும் கறைகளை ஈரமாயிருக்கும்பொழுதே நீக்கமுயலுவதே தகுதி. கொதிக்கக் கொதிக்க ஜலத்தைக் கறையின் மீது விடவேண்டும். பிறகு பொடி செய்த வெங்காரத்தை (Borax)—இதை வெண்கார மென்றும் சொல்லுவதுண்டு — அந்தக் கறையின் மீது சிறிது தூவ வேண்டும். மறுபடியும் இன்னும் கொஞ்சம் கொதிக்கும் ஜலத்தை அதன்

மீது விடவேண்டும். பிறகு நன்கு கழுவி, கொதிக்கவிட்டுச் சலவை செய்ய வேண்டும். பின்பு வெய்யிலில் உலர்த்த வேண்டும்.

ஒயின்.

இது மேற் கூறியவற்றுக்கு அடுத்தபடியாக மிகுதியாய் உட்கொள்ளப்படும் திரவம். இதனால் கறை உண்டாவது வெகு சாதாரணம். ஏனெனில் இதை உட்கொள்ளுவோர் சீக்கிரத்தில் ஒருவித லாகிரியை அடைகிறார்கள். அக்காலங்களில் அவர்களுக்குக் கைகால் முதலியனவற்றின் மேல் முழுஸ்வாதீனம் கிடையாது. வாய்க்குக்கொண்டு போகப்படும் 'கிளாவில்' உள்ள திரவம், வாயினுட்புகாமல் 'ஷர்டின்' மேல் வழிந்து விடுவது அடிக்கடி நேரிடும் சம்பவம். இதனால் உண்டான கறையை ஈரமிருக்கும் போதே நீக்க முயலவேண்டும். சிறிது கஞ்சிப்பசையை (Starch) கறையின் மேல் தடவி சுமார் இரண்டு மணி நேரம் வரை வைத்திருக்க வேண்டும். இதற்குள் உலர்ந்து போயிருக்கும் கஞ்சிப் பசையைச் சுரண்டி எடுத்தால் அநேகமாய்க் கறையும் காணாது. பிறகு சலவை செய்துவிட்டால் கறை முற்றிலும் அகன்று விடும்.

இன்னொரு முறை:—கறையின் மேல் சிறிது எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழியவேண்டும். பிறகு கொஞ்சம் பொடி செய்த உப்பை அதன் மீது தூவி ஒரு எலும்புக் கரண்டிக் காம்பினால் தேய்க்கவேண்டும். [பல் தேய்க்கும் 'ப்ரஷ்' (Tooth Brush) போன்றவற்றின் காம்பினால் தேய்க்கலாம்] அவசியம் போல இன்னும் கொஞ்சம் எலுமிச்சம் பழச் சாற்றைச் சொட்டிக் கொள்ளலாம். பிறகு நன்கு கழுவிச்சலவை செய்ய வேண்டும்.

அ